PR/2019/4/T

From the People of Japan

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3 தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

**ஊடக அறிக்கை**

**ஜனவரி** 25,2019

## இலங்கையின் வடமாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கு ஜப்பான் மானிய நிதியுதவி

இலங்கையின் வடமாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கு ஜப்பான் அரசாங்கம் 624,382 அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக 100 மில்லியன் இலங்கை ரூபா) மானிய நிதியுதவியை வழங்கியுள்ளது.

இதற்கான உடன்படிக்கை 24.01.2019 அன்று கொழும்பில் உள்ள தூதுவரில்லத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா - சமூக ஒற்றுமைக்கான டெல்வன் உதவித்திட்ட (DASH) நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கு உதவி வழங்கும் பிரதான அனுசரணையாளராக ஜப்பான் கடந்த 2003 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. அடித்தள மனித பாதுகாப்பு திட்டத்திற்காக ஜப்பான், இதுவரை 34.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளது.

இந்த உதவியானது இலங்கையில் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த உதவியுள்ளதுடன் இடம்பெயர்ந்த மக்களின் விவசாயம் மற்றும் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் துணைபுரிந்துள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டில் கண்ணிவெடியற்ற இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற இலக்கையும் இது கொண்டுள்ளது

DASH நிறுவனம் கடந்த 2010 ஆம் ஆண்டு முதற்கொண்டு இலங்கையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வருகின்றது.

இந்த மானிய உதவித்திட்டம் குறித்து கருத்து வெளியிட்ட DASH நிறுவன திட்டமிடல் முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி,

**“இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைக்கு ஜப்பான் பிரதான அனுசரணையாளராக ஆரம்பத்திலிருந்து செயற்பட்டுவருகின்றது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் DASH நிறுவனத்துக்கு ஜப்பான் நிதியுதவி வழங்கிகின்றது.**

**இலங்கையில் கடந்த 3 தசாப்தங்களாக யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் தொடர்ந்தும் கண்ணிவெடிகள் மற்றும் ஆயுதங்கள் காணப்படுகின்றன.**

**DASH நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்திற்கு வழங்கப்பட்ட மானிய நிதியானது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு மாத்திரமல்லாமல் மீள்குடியேறிய மக்களின் நிலைபேறான பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் உதவும்.**

**DASH நிறுவனத்திற்கு ஜப்பான் வழங்கும் நிதியுதவியினால் வடக்கில் உள்ள அதிகளவான இளையோருக்கும் உதவிகள் அவசியமானவர்களுக்கும் வேலைவாய்ப்புக்களை பெற்றுத்தரக்கூடியதாகவுள்ளது. அத்தோடு சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கும் உதவுகின்றது.**

**யுத்தத்தில் நேரடியாகவோ அன்றேல் மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருந்த இளையோருக்கு உதவுகின்றமையே இந்த நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்கக்கூடிய மிக முக்கியமான விடயம் என்பதில் DASH நம்பிக்கைகொண்டுள்ளது. இளையோருக்கு உதவுதல் என்கின்றபோது அவர்களுக்கு வருமானத்தை ஈட்டும் மூலமாக மட்டுமன்றி மிகமுக்கியமாக எமது சமூகத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கும் வழிவகுக்கும்.**

**ஜப்பான் நாட்டினதும் அதன் மக்களதும் நெருக்கமானதும் ஆதரவுமிக்கதுமான நட்புறவை ஒவ்வொரு இலங்கையரும் மிகவும் உயர்வாக பாராட்டிப் போற்றுகின்ற கின்றனர் என்று அவர் கூறினார்.**

*********************************************************


மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து ஜப்பானியத்தூதரகத்தின் அபிவிருத்தி கூட்டுறவுப்பிரிவைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 011-2693831 ext 225

மின்னஞ்சல்: cultujpn@co.mofa.go.jp